**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | திரு. சித்ரா |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.08.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை, ஆணையூர், இலங்கை அகதிகள் முகாமில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் பெயர் தெய்வேந்திரன். அவர் பெயின்டிங் தொழில் செய்து வந்தார். எனது கணவர் இறந்து 1 1/2 மாதங்கள் ஆகிறது. எனக்கு மூன்று பிள்ளைகள். எனது இரண்டாவது மகள் பெயர் சாருலதா. அவரை சேலம் மாவட்டம். ஓமலூர் இலங்கை அகதிகள் முகாமில் உள்ள காலாவதி, மகாலிங்கம் மகன் கஜேந்திரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். கடந்த 2014ம் ஆண்டு, 31ம் தேதி 8ம் மாதம் திருமணம் செய்து கொடுத்தோம். திருமணத்தின்போது 8 பவுன் நகையும், பணம் ரூ.50,000/- மற்றும் வீட்டு பொருட்கள் சீர்வரிசையாக கொடுத்தோம். கல்யாணம் ஆகி எனது மகள் சேலத்தில் தான் இருந்தார். எனது மகளுக்கும் எதிரிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்கும் வரை நன்றாகத்தான் இருந்தார்கள். குழந்தை பிறந்த கொஞ்ச நாள் கழித்து ஒரு லட்சம் ரூபாய் பணமும், வாசிங்மெஷினும், ஏர் கூலரும் வேண்டும் என்று எனது மகளிடம் கேட்டுக்கொண்டே இருந்துள்ளார்கள். எனது மகள் எங்களிடம் இது பற்றி சொல்லவில்லை. ஏற்கனவே நாங்கள் எனது மகளின்

திருமண கடனில் இருந்தோம். எனது மகளை டார்ச்சர் செய்து கொண்டே இருந்துள்ளார்கள். ஒரு லட்சம் பணம் வேண்டும் என்றும், அதை வாங்கிட்டுவந்தால் நீ இங்கே இருக்கலாம் என்றும் இல்லை என்றால் உனது அப்பா வீட்டிற்கு போ என்று எனது மகளிடம் எதிரி சொல்லியுள்ளார். எனது மகள் எங்களிடம் போன் செய்து சொன்னார். எதிரி ர்ச்சர் செய்ததால், குழந்தை பிறந்த 10 மாதத்தில் எனது மகள் சேலத்தில் எதிரியின் வீட்டில் வைத்து தூக்கு போட்டு தற்கொலை செய்துகொள்ள முயற்சிசெய்துள்ளார். அப்போது பக்கத்தில் இருந்தவர்கள் பார்த்து காப்பாற்றியுள்ளார்கள். எனது கணவருக்கு போன் செய்து, என்னய்யா, உன் பொண்ணை கூட்டிட்டு போயா என்று சொல்லி மிரட்டியுள்ளார்கள். நான் கேட்ட காசு, பிரோ, பிரிட்ஜ் ஆகியவற்றை கொடுத்து உன் பெண்ணை கூட்டிட்டுவா என்று எதிரி சொல்லியுள்ளார். எனது கணவர் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். சமாதானம் செய்து விட்டுவிட்டு வரத்தான் பார்த்தார். ஆனால் எதிரிகள் அதை கேட்காமல் எனது மகளை கூட்டிக்கொண்டு செல்லுமாறு எனது கணவரிடம் சொல்லியுள்ளார்கள். மீண்டும் எனது மகளை சமாதானம் செய்து எதிரி வீட்டில் வி ட்டுவிட்டு வர எனது கணவர் முயற்சி செய்தும், எதிரிகள் கதவை பூட்டிவிட்டு, உள்ளே இருந்து கொண்டார்கள். எனது கணவர் சமாதானம் செய்து எனது மகளை விட்டுவிட்டு போக எவ்வளவோ முயற்சி செய்தும் எதிரிகள் கதவை பூட்டிக்கொண்டு, உனது மகளை கூட்டிக்கொண்டு போனாலே போ என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு எனது கணவர் பக்கத்து வீட்டில் தண்ணீர் வாங்கி குடித்துவிட்டு பஸ் ஏரி எனது மகளுடன் வந்தார். அதற்கு பிறகு, எதிரிகள் போன் மேல் போன் போட்டு பணத்தை ரெடி பண்ணிட்டியா என்று கேட்டுக்கொண்டே இருந்தார்கள். நாங்கள் பணத்தை ரெடி செய்து தருகிறோம் என்று சொன்னோம். எனது மகளிடம் போன் செய்து 1 வது எதிரி மிரட்டிக்கொண்டே இருந்துள்ளார். பணத்தை ரெடி செய்துவிட்டாயா, அங்க யாரையும் வைச்சிருக்கியா என்று எனது மகளுக்கு 1 வது எதிரி நைட், நைட் போன் செய்து டார்ச்சர் செய்துள்ளார். எனது மகள், 1 வது எதிரி போன் செய்தவுடன் போனை எடுத்துக்கொண்டு போய்விடுவார். பிறகு எதிரிகள்

எனது வீட்டிற்கு 2015ஆம் ஆண்டு வந்தார்கள். எனது மகள் மருந்து குடிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிரிகள் வந்தார்கள். குழந்தையைத் தூக்கிக்கொண்டு செல்ல வந்தார்கள். குழந்தை 10 மாதக்குழந்தை. பால் கொடுக்கவேண்டும் என்று சொன்னோம். எதிரிகள் ஒரு வாரத்தில் நாங்கள் கேட்ட பணம் ஒருலட்சத்தை கொடுத்துவிட்டு, உனது மகளை கொண்டுவந்து விட்டால் விடு இல்லைஎன்றால் டைவர்ஸ் நோட்டீஸ் வரும் என்று தாயும், பிள்ளையும் சொல்லிவிட்டு போய்விட்டார்கள். அங்க போய், எனது பேரன் மோனிஷ் 1வது எதிரிக்கு பிறக்கவில்லை என்றும், வேறு யாருக்கோ பிறந்ததுள்ளதால் தான் உனது அப்பன் உன்னை அங்கேயே குழந்தையுடன் வைத்திருக்கிறான் என்று 1 வது எதிரி சொல்லியுள்ளார். போனில் 1 வது எதிரி எனது மகளை கேவலமாகவும், மிகவும் அசிங்க அசிங்கமாகவும் எனது பிள்ளையைத்திட்டியுள்ளான். அதனால் எனது மகள் மிகவும் மன வேதனையும் என்னிடம் அழுது கொண்டே சொன்னார். (சாட்சி பேச இயலாமல் அழுதுகொண்டே சாட்சியம் அளிக்கிறார்). நாங்கள் இல்லாத நேரம் பார்த்து, 5ம் மாதம் 21ம் தேதி, 2016ம் வருடம் எனது மகள் விஷம் குடித்துவிட்டார். 3 பாட்டில் சூப்பர் வாஸ்மால் குடித்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் 3 பாட்டில்கள் தான் கட்டிலுக்கு கீழே கிடந்தது. நான் தான் பார்த்தேன். அந்த 3 பாட்டில்கள் **அசாபொ.1 ஆகும்.** (சாட்சி அந்த பாட்டில்களை பார்த்தவுடன் மீண்டும் கதறி அழுகிறார்). நான் தான் அந்த 3 விஷபாட்டில்களை கட்டிலுக்கு அடியில் பார்த்தேன். எனது மகள் அந்த பாட்டில்களில் இருந்த விஷத்தை குடித்துவிட்டிருந்தார். பிறகு எனது மகளை மதுரை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்றோம். அங்கு அவருக்கு மூச்சு கொடுத்து இருந்தார்கள். எனது மகள் அங்கு பேச்சு இல்லாமல் இருந்தார். 6ம் மாதம் 2ம்தேதி எனது மகள் இறந்துவிட்டார். எனது மகள் +2 முடித்துவிட்டு ஒரு வருஷம் காலேஜ்க்கு போனார். என்னிடம் காட்டப்படும் தற்கொலை கடித்தில் உள்ள எழுத்துக்கள் எனது மகளின் எழுத்துக்கள் தான். **அந்த கடிதம் அதசாஆ.1 ஆகும்.** எனது கணவர் தான் புகார் கொடுத்தார். அதில் அவர் கையெழுத்து உள்ளது. **அந்த புகார் அதசாஆ.2 ஆகும்.** என் பொண்ணு

இறந்ததில் இருந்து எனது கணவர் மிகவும் கவலையாக இருந்தார். அவரால் அதிலிருந்து மீண்டுவரமுடியவில்லை. எனது மகள் இறந்த அன்று RDO நீதிமன்றத்திற்கு கூட்டிக்கொண்டு போனார்கள். எனது பொண்ணு இறந்து 1 மாதம் கழித்து போலிசார் என்னை நீதிமன்றத்திற்கு கூட்டிச்சென்றார்கள். அங்கு நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பிரிவு 164 குவிமுச படியான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த வாக்குமூலம் அதசாஆ.3 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | திரு. பாரதிதாசன் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.08.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை, ஆனையூரில் இலங்கை அகதிகள் முகாமில் குடியிருந்து வருகிறேன். செக்யூரிட்டியாக மதுரை ரெயில்வே குட்டிஷெட்டில் செக்யூரிட்டியாக வேலை செய்கிறேன். தற்போது அதே குட்ஷெட்டில் கணக்குப்பிள்ளையாக வேலை செய்கிறேன். சாட்சி தெய்வேந்திரன் எனக்கு பக்கத்துவீட்டுக்காரர். 31.08.2014 அன்று தெய்வேந்திரன் அவரது மகளுக்கு கல்யாணம் முடித்தார். நானும் அந்த கல்யாணத்திற்கு போயிருந்தேன். சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகா, பவளத்தானூர் பகுதியில் உள்ள மகாலிங்கம் மகன் கஜேந்திரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார். இறந்த பெண்ணின் மாமியார் பெயர் கலாவதி. திருமணத்திற்கு பிறகு 1 வது எதிரிக்கும், அந்த பெண்ணிற்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு சுமார் 10 மாதங்கள் இருந்தது. இருவரும் சந்தோஷமாகத்தான் இருந்தார்கள். திடீர் என்று அந்த பெண் மன சங்கடத்தில் இருப்பதாக தெய்வேந்திரன் என்னிடம் சொல்லி புலம்புவார். ஒரு நாள் அவசர அவசரமாக தெய்வேந்திரன் சேலத்திற்கு புறப்பட்டார்கள். மாமியார், கணவர் டார்ச்சர் தாங்கமால் தெய்வேந்திரனின் மகள் தூக்கு போட்டு தற்கொலை

செய்துகொள்ள போனதாகவும், அக்கம், பக்கத்தில் இருந்தவர்கள் அதைப்பார்த்து தடுத்ததாகவும் என்னிடம் தெய்வேந்திரன் சொன்னார். தன்னுடைய மகளை, மருமகன் 1 வது எதிரியுடன் சேர்த்துவைக்க தெய்வேந்திரன் எவ்வளவோ போராடியுள்ளார். அதற்கு எதிரிகள் அதெல்லாம் கிடையாது என்றும், பணம் ஒரு லட்சமும், பிரோ, பிரிட்ஜ் போன்ற பொருட்களை கொடுத்துவிட்டு மகளை விட்டுவிட்டு செல்லுமாறு 1 வது எதிரி சொல்லியுள்ளார். அதற்கு பிறகு மன உளைச்சலில் தெய்வேந்திரன் தனது மகளை கூட்டிக்கொண்டு இங்கு வந்துவிட்டார். அந்த பொண்ணுக்கு இரவு நேரத்தில் அடிக்கடி போன் செய்து டார்ச்சர் செய்வதாக தெய்வேந்திரன் சொன்னார். நான் தெய்வேந்திரனிடம் கேட்டபோது, 1 வது எதிரிக்கும் அவரது மனைவிக்கும் பிறந்த குழந்தை 1 வது எதிரிக்கு பிறக்கவில்லை என்றும், மிகவும் கொடிய வார்த்தைகளால் 1 வது எதிரி தெய்வேந்திரனின் மகளிம் பேசியுள்ளார். அதனால் தெய்வேந்திரனின் மகள் மிகவும் மன வேதனையுடன் இருந்துள்ளார். மன உளைச்சலில் இருந்த அந்த பெண் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் 21.05.2016 அன்று தலைக்கு தேய்க்கும் சூப்பர் வாஸ்மால் ஆயிலை குடித்து தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளது. மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் தெய்வேந்திரனின் மகளை அட்மீட் செய்திருந்தார்கள். நானும் மருத்துவமனைக்கு சென்று அவரை பார்த்தேன். அந்த பெண்ணால் பேசமுடியாத சூழ்நிலையில் இருந்தது. தெய்வேந்திரனின் மகள் பேச முடியாததால் அவர் கைப்பட எழுதிய கடிதத்தை காட்டினார்கள். என்னிடம் காட்டப்படும் அதசாஆ.1 ஐ என்னிடம் காட்டினார்கள். RDO விசாரணையின் போது என்னிடம் அதசாஆ.1 ஐ காட்டினார்கள். நான் அதை படித்துப்பார்த்தேன். அதன் பிறகு என்னை மேலூர் நீதிமன்றத்திலும் விசாரணை செய்தார்கள். அங்கும் நான் வாக்குமூலம் கொடுத்தேன். நான் கொடுத்த பிரிவு 164 குவிமுச **வாக்குமூலம் அதசாஆ.4 ஆகும்.** 10 நாட்களாக உயிருக்கு போராடிக்கொண்டு இருந்த தெய்வேந்திரன் மகள் கடந்த 02.06.2016 அன்று இறந்துவிட்டார். அதற்கு அடுத்து, அவர் இறந்த உடன் 1 வது எதிரிக்கு தகவல் கொடுத்தோம். தகவல்

கொடுத்தபிறகு 1 வது எதிரி வந்து பார்த்தார். இறந்த அவரது மனைவியைப் பார்த்து அவருக்கு கவலையில்லை. ஆனால் அந்த 11 மாதக் குழந்தையை மட்டும் கொடுங்கள் என்று கேட்டார். இறந்த பெண்ணின் தாயார் அப்போது பேச இயலாத நிலையில் இருந்தார். அப்போது அங்கு பொதுவில் இருந்த பெரியவர்கள் நாங்கள் 10 பேர் இருந்தோம். 11 மாதக் குழந்தை பால் குடிக்கும் குழந்தை என்றும், பால் குடி மறக்காத பிள்ளை என்றும், தற்போது அந்த குழந்தை அவரது அம்மாச்சி, தாத்தாவிடம் இருக்கட்டும் என்று சொல்லி குழந்தையை தெய்வேந்திரன் மற்றும் அவரது மனைவியிடம் ஒப்படைத்தோம். அந்த குழந்தையின் பிறப்பு பதிவு சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பவளத்தானூரில் இருந்தது. அந்தப்பதிவை தற்போது மதுரை மாவட்டம், ஆனையூர் அகதிகள் முகாமில் உள்ள சித்ரா அசா1 ன் பதிவிற்கு மாற்றிக்கொடுத்தேன். தற்போது அந்த குழந்தை அசா1 ன் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார். 30.05.2016 அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். அவரிடமும் நான் இதே விபரங்களைத்தான் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை